**நாவலபிடிய நகர சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 26 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் நாவலபிடிய நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பயன்படுத்த முடியாத ரூபா 1,830,323 பெறுமதியான பண்டங்கள் பராதீனம் செய்யப்படாமல் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | COVID 19 காரணமாக ஏலத்தில் விற்க முடியவில்லை என அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் நிலுவை குத்தகை வருமானம் ரூபா 185,188 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | அட்டவணைகளை சரி செய்ததாக அறிவிக்கிறேன். |
| (iii) | சபைக்கு சொந்தமான கடையறைகளை குத்தகை வழங்கி ஒரே தடவையில் அறவிடும் பணம் ரூபா 3,100,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iv) | ரூபா 920,000 பெறுமதியான 22 பொது வைப்பு மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 கணக்கு தயாரிக்கையில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (v) | ரூபா 6,378,668 பெறுமதியான 13 அபிவிருத்தி முன்மொழிவுகள் கடன்கொடுனராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2010 இலிருந்து நிலவி வரும் பிரச்சினை ஆகையால் சபை எடுக்கும் நடவடிக்கை படி கணக்கீடு செய்வதாக அறிவிக்கிறேன். |

(ஆ) **இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கூட்டுத் தொகை ரூபா 4,775,867 ஆன 03 கணக்கு மீதிகளுடன் தொடர்பான மீதிகள் மற்றும் உபயோக பதிவேடுகளில் குறிப்பிடப்படும் மீதிகளிற்கிடையில், ரூபா 1,514,695 ஆன வித்தியாசம் ஆனது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(இ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆண்டு 1 – 5 இற்கு இடைப்பட்ட காலத்தை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,785,018 ஆனதுடன், 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகள் ரூபா 5,632,723 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | ஒரு வருடத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,262,629 ஆனதுடன் 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 11,845,252 உம் ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் | செலுத்த வேண்டிய தொகையை எதிர்காலத்தில் செலுத்தி முடிப்பதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **கண்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 4,116,325 ஆன 06 கணக்கு விடயங்களிற்குரிய மீதி உருதிப்படுத்தல் மற்றும் அட்டவணைகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உருதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | சான்றுகளை சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நகர சபை அதிகாரச் சட்டத்தின் 36 (உ) (ii) பிரிவு | | | | |
| | | (i) | ஜயதிலக விளையாட்டரங்கிற்கு பிரவேசிக்கும் இடத்தில் நடாத்திச் செல்லும் கடையறையை விடய பொருப்பு அமைச்சரின் அங்கீகாரமின்றி மற்றும் மதிப்பீடின்றி ரூபா 2,047 ஆன நில வாடகைக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | விடய பொருப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று மதிப்பிட்டு குத்தகை வழங்க அல்லது உடமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடையறைக்காக புதிய மதிப்பீட்டை பெறவும், மேலதிகமாக பயன்படுத்தும் நிலத்திற்காக நில வாடகை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| | | (ii) | விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் மற்றும் மதிப்பீடின்றி கூட்டுறவு சங்கமொன்றிற்கு பாற்சாலை ஒன்றை நடாத்திச் செல்ல காணித்துண்டு ஒன்றை குத்தகைக்கு வழங்கி மாதம் ரூபா 1,200 தொகை அறவிடப்பட்டிருந்தது. | விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று மதிப்பீடு செய்து குத்தகை வழங்க அல்லது உடமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2006 ஆகஸ்ட் 21 திகதி சபை இலக்கம் 5:28 கொண்ட தீர்மானத்தால் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. |
| | | (iii) | தொலஸ்பாகை பாதையில் அமைந்துள்ள 1772 இலக்க வரைபடத்தின் 0.61 பர்சஸ் காணியை விடய பொருப்பு அமைச்சரின் அங்கீகாரமின்றி குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | அங்கீகாரம் பெற்று மதிப்பீடு செய்து குத்தகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடய பொருப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு | நிதிக் கூற்றுடன் சபையின் செயலாற்றுகை அறிக்கையொன்று முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கையை முன் வைக்க நடவாடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் முன்வைப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 கொண்ட உளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| | (i) 5 (1) பிரிவு | சபைக்கு சொந்தமான 5 வியாபார கட்டிடத் தொகுதிகளின் கடையறை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிட்டு வாடகையை திருத்த வேண்டும். | மதிப்பீட்டை கோரியுள்ள போதும் கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். கொத்மலை கடையறைகளிற்காக மதிப்பீடு கடைத்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| | (ii) 1 (v) பிரிவு | சுற்றறிக்கை பிரகாரம் ரூபா 1,813,799 ஒரே தடவையில் அறவிடும் பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரே தடவையில் அறவிடும் பணத்தை சுற்றறிக்கை ஆலோசனைப்படி அறவிட வேண்டும் | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டு இருப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகைகள் கை நூலின் 2:14:1 பிரிவு | விலை மனு கோராமல் மற்றும் தொழிநுட்ப ஆய்வறிக்கையின்றி பொது நூலகத்தில் தகவல் தொகுதி ஒன்றை நிறுவுதல், ஜயதிலக விளையாட்டரங்க நீச்சல் தடாகத்திற்கு இரசாயண பொருட்களை கொள்வனவு செய்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல், அலுவலக அடையாள அட்டை மற்றும் நீர் மோடார் ஒன்றை கொள்வனவு செய்ய ரூபா 940,603 செலுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் கொள்வனவு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 31,259,441 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 44,664,940 ஆனது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 4 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 146,532 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாண ஆலோசனைப் படி நடவடிக்க எடுக்க வேண்டும். | இதற்காக நினைவூட்டல் அனுப்பவும் ஓய்வூதியத்திலிருந்து தீர்த்துக் கொள்ளவும், நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 13,086,686 | 13,086,686 | 9,036,774 | 12,347,496 | 14,313,751 | 13,101,409 | 10,232,626 | 10,101,074 |
| (ii) | வாடகை | 35,040,592 | 39,949,696 | 18,933,388 | 39,153,497 | 23,607,529 | 6,895,236 | 5,697,443 | 2,268,196 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,520,000 | 1,423,260 | 1,373,655 | 49,605 | 1,960,000 | 1,550,889 | 1,564,889 | (14,000) |
| (iv) | ஏனைய வருமானம் | 7,806,000 | 5,577,516 | 2,309,518 | 6,642,592 | 14,227,280 | 30,274,978 | 13,855,845 | 19,545,294 |
| | | 57,453,278 | 60,037,158 | 31,653,335 | 58,193,190 | 54,108,560 | 51,822,512 | 31,350,803 | 31,900,564 |

#### 2.3.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா 5,979,070 ஆனது. | அறவிடப்பட வேண்டும். | இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.3.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 6 வியாபார கட்டிடத் தொகுதிகளிலிருந்து ரூபா 33,026,495 கடையறை வாடகை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு குத்தகை வாடகையை அறவிடப்பட வேண்டும். | கடையறை வாடகையை அறவிட தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.3.4 ஏனைய வருமானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையில் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிலிருந்து ரூபா 2,568,399 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கழிவு மத்திய நிலையத்தில் பசளை விற்பனையால் 2 நிறுவனங்களிலிருந்து ரூபா 1,564,540 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடலை துரிதப்படுத்த வேண்டும். | இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.3.5 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 246,500 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,951,800 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை செய்வதற்காக உப விதிகள் விதிக்கபட வேண்டிய போதும் 5 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய துணைச் சட்டங்களை விதித்து வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 உப விதிகளில் 7 உப விதிகள் மீளாய்விற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) ஒதுக்கீடு வழங்கப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 7 செயற்பாடுகளிற்கு வருடாந்த பாதீட்டினூடாக ஓதுக்கீடு ஏற்பாடு செய்யப்படாததால் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தன. | செயல் நடவடிக்கை திட்டத்தை நடைமுறைப்படுத்த பாதீட்டினால் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். | பரீட்சித்து அறிக்கையிடுவதாக அறிவிக்கிறேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அதன் காரணமாக அது தொடர்பாக போதிய செயற்பாடொன்று ஆற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 18 ஏக்கர் 02 ரூட் அளவான இவ் IDH காணியிலிருந்து 10 ஏக்கர் 03 ரூட் 17.55 பர்சஸ் அளவான காணி துண்டொன்று நகர சபை சட்டத்தின் 36 (உ) 11 பந்திக்கு இணங்காது 50 ஆண்டுகளிற்கு முன்னர் பயிர் செய்கைக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், இங்கு நூறு அளவான குடும்பங்கள் வீடுகளை அமைத்து குடியமர்ந்திருந்தனர். இக் காணி 1997 ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், 2019 திசெம்பர் வரையும் குத்தகை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அனுமதியற்ற குடியேற்றத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான காணிகள் விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று மதிப்பிட்டு குத்தகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது நீண்ட கால பிரச்சினையாகும். இக் காணி 1997 இல் மதிப்பிடப்பட்ட காலத்திலேயே வழங்கப்படவில்லை. சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறைந்த மதிப்பீடு ஒன்றை பெற்று சபைக்கு நிதியொன்றை அறவிட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 ஊழியர் மிகை மற்றும் 12 ஊழியர் வெற்றிடங்களும் ஆனது. | குறித்த வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | ஊழியர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | வேலையை விட்டுச் சென்ற, இடமாற்றம் மற்றும் ஓய்வு பெற்ற 52 அலுவலர்களிடமிருந்து ரூபா 2,080,998 ஆன கடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறப்பங்காடி கட்டிடத் தொகதியில் 173 இலக்க சிறு திரைப்பட சாலையை 2011 ஆகஸ்ட் 23 திகதி நபர் ஒருவருக்கு டென்டர் செய்யாது நீண்டகாலத்திற்கு குத்தகை | பிணைக் காப்பு, ஒரே தடவையில் செலுத்தும் பணம், மாதாந்த வாடகை மற்றும் அனைத்து | சபைக்கு செலுத்தியுள்ள 37 இலட்சத்திற்காக புதிய மதிப்பீடொன்றை பெற்றுத் தருமாறு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்து |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன், பிணைக் காப்பு மற்றும் ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 500,000 மற்றும் மாதாந்த வாடகை ரூபா 284,256 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணமும் அறவிடப்பட வேண்டும். | அனுப்பியுள்ளதாக அறிவிக்கிறேன். சபைக்கு ரூபா 500,000 நிலுவை ஒன்றே அறவிட உள்ளதாக அறிக்கை செய்கிறேன். |
| (ஆ) | சிறப்பங்காடி கட்டிடத் தொகுதி கடையறை புதிய மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்தாததால் ரூபா 32,675,828 ஆன கடையறை வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து கெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | 2008 வீதவரி மதிப்பீட்டின் மீது 2019 ஆண்டு வரையும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | வீதவரியினை 5 வருடங்களிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டும். | மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சிறப்பங்காடி கட்டிடத் தொகுதியின் 2 கடையறைகள் மற்றும் 3 வீடுகள் மூடப்பட்டிருந்தன. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்தி வருமானம் ஈட்டிக் கொள்ள வேண்டும். | 2 வீடுகள் முத்திரை இடப்பட்டுள்ளதுடன், டென்டர் செய்யப்பட்ட போதும் பெறுனர்கள் முன்வரவில்லை. 3 கடையறைகள் பெறுனர்களின் கோரிக்கையின் மீது வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.5.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நாவலபிடிய விளையாட்டரங்கில் 600 வர்க்க அடியளவான கட்டிடம் பயன்படுத்தப்படாது பழைய பண்டங்கள் இடப்பட்டிருந்தன. | சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். | இக் கட்டிடத்தை மூன்று மாடிகளிற்கு நிர்மாணித்து முன்பள்ளி மற்றும் மதியநேர பாதுகாப்பு மத்திய நிலையமொன்றிற்கு வழங்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**3.6 பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 19,973,949 தொகைக்கு பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், பெறுகைகள் திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து பெறுகைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |